[27th March 1961

SRI A. A. RASHEED : May I know the reasons for not teaching Hindi as a compulsory subject?

THE HON. SRI C. SUBRAMANIAM : Because of the language policy.

SRI S. M. ANNAMALAI : ஹிந்தியை கட்டாய பாடமாக்கா விட்டாலும் கூட ஹிந்தி படிக்கிற மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் இவ்வளவு மார்க்ஸ் வாங்கினால்தான் தேர்ச்சி பெற முடியும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹிந்தி எடுத்துப் படித்தால் அதில் பரீட்சை எழுதவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : தாய்மொழியின் அவசியத்தை கவனிப்பது எவ்வளவு அவசியமோ அதற்கு சிறிது குறைந்த பங்காவது ஒரு பொது மொழி அவசியம் என்று வற்புறுத்தும் வகையில் இந்தி கட்டாய முறையைத் தவிர்த்து வேறு ஏதாவது முறையில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுக்கு கொண்டு வர முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நாம் வகுத்திருக்கிற கொள்கைப்படி இந்திக்கு போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Wild Life Sanctuaries

* 1109 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் வனவிலங்கு சாலையம் எங்கெங்கே துவக்க திட்டமிடப்பட்டிக்கிறது?

(இ) எப்போது? என்ன செலவில்?

(உ) ஒவ்வொரு காட்டிலும் என்னென்ன மிருகங்கள் வளர்க்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ( ) It is proposed to open four new Wild Life Sanctuaries at Muthukuzhivayal in Kanyakumari district, Topslip in Coimbatore district, Kodaikkanal in Madurai district and at Kodaikadu in Thanjavur district.

(இ) These new Sanctuaries will be constituted as early as possible and within the Third Five-Year Plan period, if possible.

The cost involved will be known only after the extent to be covered, the improvements to be carried out and the staff, etc., to be employed, are determined after investigation of the respective areas which is now in progress.

(உ) Three copies of a statement showing the different species of animals and also birds that would be protected in the new Sanctuaries are placed in the Library of the Legislative Assembly.

27th March 1961]

SRI A. VEDARATHNAM : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதையெல்லாம் வன விலங்கு சரணலயங்களாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்ருல் இப்பொழுதே அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற வேண்டுமே, அவை ஏதாவது நடைபெற்று வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் உத்தேசம். இப்பொழுது பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இது விஷயத்தில் 1,05,000 ரூபாய் கூட ஒதுக்கப் பட்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : May I know whether there was a proposal to start a sanctuary in the Kanyakumari district and if so, whether that proposal has been dropped?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முத்துக்குழிவயல் என்று சொன்னேனே, அது கன்னியாகுமரியைச் சேர்ந்ததுதான்.

SRI N. MARUDACHALAM : கோவையில் ஒரு வன விலங்கு சரணலயம் எடுத்துக்கொள்ள முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவோ எடுத்துக்கொள்ளலாம். இப்பொழுது நான்கு எடுத்துக் கொள்ள உத்தேசம்.

Bill-collectors (promotion)

* 1110 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆரணி நகராட்சி மன்றம் பில் கலெக்டர்களின் உத்தியோக உயர்வு குறித்தும், இன்னும் சில சலுகைகளைக் குறித்தும் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் தேதி யில் நகராட்சி மன்றத்தால் நிறைவேற்றிய தீர்மானம் கிடைத் ததா ?

(இ) அப்படியாயின், அதன்மீது எடுத்துக்கொண்ட நட வடிக்கை என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) No such resolution has been received by Government.

(இ) The question does not arise.

Dealers in old bottles (sales tax)

* 1111 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பழைய மார்க்கெட் வியாபாரிகளின் சங்கச் செயலாளர் அவர்களின் 20—1—1961 தேதியிட்ட பழைய பாட்டில் (old scrap bottles) வியாபாரிகள் மீது விதித்துள்ள விற்பனை வரியை ரத்து செய்யும்படி கோரிய மனு கிடைத்ததா ?